3. கவன ஈர்ப்புகள்.

(அ) முந்திரி தொழிற்சாலையில் பணிபுரிபவர்களுக்கு தோல் வியாதி ஏற்படுவது.

திரு. மி. வின்சென்ட்: துணைத் தலைவர் அவர்களே, "முந்திரித் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு முந்திரிபால் படுவதால் தோல் வியாதி வருவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்,

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவை முன் கீழ்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 173 முந்திரி தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் சுமார் 44,310 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இத்தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களில் பெண்களே அதிகம். முந்திரிக் கொட்டையை வறுத்து உடைக்கும்போது வெளிப்படுகின்ற முந்திரி எண்ணெய் புண் உண்டாக்கும் தன்மையையும், அரிக்கும் தன்மையையும் உடையது. தொழிலாளர்களின் கைகளில் தொடர்ந்து அதிக நாட்கள் இந்த எண்ணை படுமானால், டெர்மடைடிஸ் (Dermatetis) என்னும் தோல் வியாதி உண்டாகலாம்.

முந்திரி எண்ணெயை கையாள்வதினால் ஏற்படும் உடல் தீங்கை உணர்ந்த மாநில அரசு 1979-ம் ஆண்டிலேயே இதைப் பற்றி ஆராய்வதற்காக திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த திறமை வாய்ந்த மருத்துவ வல்லுநர்களைக் கொண்ட ஒரு சிறப்புக் குழுவை அமைத்தது. இந்தச் சிறப்புக்குழு தங்கள் பரிந்துரைகளை சமர்ப்பித்து அவை மாநில அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

குழந்தைகள் காப்பகம் அமைத்தல், வேலைசெய்வதற்கேற்ற பெஞ்சுகள், மேஜைகள், அமைத்தல் தொழிலாளர் மருத்துவ பரிசோதனை, தொழிலாளர்களுக்கு தேங்காய் எண்ணை, ரப்பர் கையுறை, தடுப்பு மருந்து (கிரீம்), சோப்பு, பருத்தி அங்கி, முக மூடி முதலியன கொடுத்தல், கழுவும் இடம் அமைத்தல் போன்ற இச்சிறப்புக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட முறைகள் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளின் கீழ் முந்திரித் தொழிற்சாலைகளுக்கு என்றே இயற்றப்பட்ட சிறப்பு விதிகளில் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விதிகள் மிகவும் கடுமையாக செயல்படுத்தப்படுகின்றன. முந்திரி தொழிற்சாலைகளின் மீது 1981-ம்ஆண்டில் தொடரப்பட்ட கீழ்க்கண்ட வழக்கு விபரத்திலிருந்து இது புலனாகும்.

1. சிறப்பு விதிகளின் மீறுகைகளுக்காக தொடரப்பட்ட வழக்குகள். .. 23

2. மற்ற விதிகளின் மீறுகைகளுக்காக தொடரப்பட்ட வழக்குகள் 87

மொத்தம். 110

முந்திரித் தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களின் நலனுக்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு சில ஆண்டுகளுக்கு முன்பாகவே எடுத்துள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

திரு. மி. வின்சென்ட் : துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் சுமார் 60,000 முந்திரித் தொழிலாளர்கள் உண்டு. அவர்களுக்கு, குழந்தைகள் காப்பகம் அமைத்தல், வேலை செய்வதற்கேற்ற பெஞ்சுகள், மேசைகள் அமைத்தல், மருத்துவ பரிசோதனை, தேங்காய் எண்ணெய், இரப்பர் கையுறை, தடுப்பு மருந்து, சோப்பு, பருத்தி அங்கி, முகமூடி கொடுத்தல், கழுவும் இடம் அமைத்தல் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 200-க்கு மேற்பட்ட முந்திரித் தொழிற்சாலைகளில் குமரி மாவட்டத்தில் உள்ளவற்றில் ஒன்றில்கூட முழுமையாக இந்த வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஒரு குழு பரிந்துரைமீது இன்னின்னது செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று கருதிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலிருந்து அவை சரியாக தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. உடனடியாக அங்கே பரிசோதனை செய்து ஆவன செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. மி. வின்சென்ட் : இந்தக் குழு பரிந்துரையை ஏற்காதவர்கள்மீது இலட்சக் கணக்கில் வருமானம் வருகிற முதலாளிகள் மீது ரூபாய் 15, ரூபாய் 20 என்று அபராதம் போடுவது யானை மீது எலி சவாரி செய்வது போலாகும். ஆகவே, குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்தாதவர்கள் மீது அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சிறைத் தண்டனைக்கு இடம் இருக்குமானால் அப்பேர்ப்பட்ட தண்டனை கொடுப்பதற்கும் அரசு வலியுறுத்துவதற்கு ஏற்பாடு செய்யும்.